Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 356

வெள்ளிக்கிழமை 17 நவம்பர் 2023

கார்த்தி... ...054

வடக்கு - கிழக்கு



# பல்கலைக்கழகங்களில் மூளைச் சலவையாம்!

## பதறுகின்றார் சரத் வீரசேகர

கொழும்பு, நவம்பர் 17

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் மாகாணசபைகளுக்கு பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளமை பயங்கரமானதாகும். பாதீட்டில் உள்ள இந்த முன்மொழிவுக்கு உடன்பட முடியாது - என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

»11

# பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்க வாருங்கள்!

## புலம்பெயர் தமிழர்களையும் அழைக்கின்றார் ஜனாதிபதி

கொழும்பு, நவ. 17

தமிழ், சிங்கள புலம்பெயர் இலங்கையர்கள் இந்நாட்டு பிள்ளைகளின் கல்விக்கு ஆதரவளிக்கும் வகையில் புதிய பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கவேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

»11



## மாலைதீவுக்கு பறந்தார் ரணில்

கொழும்பு, நவ. 17

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மாலை, மாலைதீவுக்குச் சென்றுள்ளார்.

மலைதீவில் அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற மொகமட்

»11

## புரையேறிய பிட்டால் உயிரிழந்த இளைஞர்!



யாழ்ப்பாணம், நவ. 17

பிட்டுப் புரையேறி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். பருத்தித்துறை - கற்கோவளத்தைச் சேர்ந்த இராசரத்தினம் சுமணன் (வயது-21) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

»11

## சர்ச்சைக்குரிய சடலம்; இனங்காணல் தாமதம்

வவுனியா, நவ. 17

வவுனியா, தரணிக்குளம் பகுதியில் கைகள், கால்கள் துண்டிக்கப்பட்டு உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் இன்னமும் இனங்காணப்படவில்லை. இதனால், உடற்கூற்றுப் பரிசோதனைகள் தாமதமடைந்துள்ளன என்று தெரி

»11

## சிறுமியைத் துன்புறுத்திய கொடூரத் தந்தைக்கு சிறை!

யாழ்ப்பாணம், நவ. 17

நான்கு வயதுச் சிறுமியை கடுமையாகத் தாக்கிச் சித்திரவதை செய்த குற்றச்சாட்டில், கடந்த வருடம் நவம்பரில் கைதுசெய்யப்பட்ட சிறுமியின் தந்தைக்கு இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பிட்டுள்ளது ஊர்காவற்றுறை நீதிமன்றம்.

»11

புலமைப்பரிசில் பரீட்சை:

## பெறுபேறுகள் வெளியாகின

கொழும்பு, நவ. 17

2023ஆம் ஆண்டுக்கான 5ஆம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்று இரவு இணையத்தளத்தில் வெளியாகியுள்ளன.

பெறுபேறுகளை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோக

»11

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமாக

## தாயகம் திரும்பியோருக்கு நீதிமன்றத்தால் பிணை!

யாழ்ப்பாணம், நவ. 17

தமிழ்நாட்டில் அகதிகளாக தஞ்சமடைந்து 33 ஆண்டுகள் வாழ்ந்து வந்த நிலையில் சட்டவிரோதமான முறையில் கடல் வழியாக தாயகம் திரும்பிய நிலையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்

»11

## யுவதி மீது பாலியல் சீண்டல்; ஒருவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், நவ. 17

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள குளிரகம் ஒன்றில் பணியாற்றும் யுவதிக்குப் பாலியல் சீண்டல் விடுத்தார் என்ற குற்றச்சாட்டில், அந்தக் குளிரகத்தின் உரிமை

»11

முன்னாள் தவிசாளர் ஜெபநேசன் உள்ளிட்ட நால்வருக்கு

# மாவீரர்தின அனுஷ்டிப்பு; நீதிமன்றுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 17

மாவீரர்தினம் அனுஷ்டிப்புத் தொடர்பாக வலி. தென்மேற்கு பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் அ.ஜெபநேசன், முன்னாள் சபை உறுப்பினர்களான அனுசன், பகீரதன், நமணன் ஆகியோரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இன்றையதினம் காலை ஒன்பது மணியளவில்

»11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு - செலவுத் திட்டத்தால் பெரும் புரட்சி வெடிக்கும்!

## எச்சரிக்கின்றார் சம்பிக்க

**கொழும்பு, நவ.17**

**அரச வருமான இலக்கினை மாத்திரம் குறிப்பிட்ட ஜனாதிபதி வருமானத்தைத் திரட்டிக்கொள்ளும் யோசனைகளைக் குறிப்பிடவில்லை. வரி விதிப்பு மாத்திரமே அவரது பிரதான பொருளாதாரக் கொள்கையாக உள்ளது. இந்த யோசனையைச் செயற்படுத்தினால் அடுத்த ஆண்டில் முதல் ஆறு மாத காலத்துக்குள் மக்கள் போராட்டம் பெரும் புரட்சியாக வெடிக்கும்.**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் குடியரசின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள் போராட்டத்தைத் தடுக்க ஆட்சியாளர்களும், ஆளும் தரப்பும் அறிவுபூர்வமாகச் சிந்திக்க வேண்டும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் யதார்த்தபூர்வமற்றது.

இந்த வரவு- செலவுத் திட்டத்தின் பல முன்மொழிவுகள் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டும் முன்வைக்கப்பட்டன. ஆனால் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

2023 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் அரச வருமான இலக்கு 3 ஆயிரத்து 130 பில்லியன் ரூபாவாக குறிப்பிடப்பட்டது. ஆனால் தற்போது 2 ஆயிரத்து 500 பில்லியன் ரூபா வருமானம் திரட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில் 2024 ஆம் ஆண்டு 3 ஆயிரத்து 820 பில்லியன் ரூபா அரச வருமான்ம் எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச நாணயநிதியத்தின் பரிந்துரைகளுக்கு அமைய அரசாங்கம் செயற்படுகிறது. மொத்தத் தேசிய உற்பத்தியை 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 15.5 சதவீதமாக அதிகரித்துக்கொள்ளவேண்டும் என்று சர்வதேச நாணயநிதியம் குறிப்பிட்டுள்ளது. இது முற்றிலும் சாத்தியமற்றது. இந்த யோசனைகளைச் செயற்படுத்தினால் சமூகக் கட்டமைப்பில் பெரும் நெருக்கடிகள் தோற்றம் பெறும். இந்த யோசனையைச் செயற்படுத்தினால் அடுத்த ஆண்டில் முதல் ஆறு மாத காலத்துக்குள் மக்கள் போராட்டம் பெரும் புரட்சியாக வெடிக்கும்- என்றார். (எ-இ)

# மருந்துக் கொள்வனவுக்கு புதிய பொறிமுறை தேவை

## நிதி அமைச்சர் சுட்டிக்காட்டு

சுகாதாரத்துறைக்குத் தேவையான மருந்துகள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு பொறிமுறையொன்றை நாடாளுமன்றத்துடன் இணைந்து முன்னெடுப்பது அவசியம் என்று நிதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மருந்துகளுக்கான பெறுகைக் கோரலை சாதாரண முறைப்படி மேற்கொள்வது தவறானது. அதை நிவர்த்தி செய்வதற்காக முன்னாள் சுகாதார அமைச்சர் அவசர மருந்துக் கொள்வனவு முறையை அறிமுகப்படுத்தினார். இந்த அவசர மருந்துக் கொள்வனவு மூலம் ஊழல் மோசடிகள் இடம்பெற்றதால் தற்போதைய சுகாதார அமைச்சர் அந்த முறையை இடைநிறுத்தியுள்ளார்.

எட்டு மாதம் அல்லது பத்து மாத காலம் தாழ்த்தி பெறுகைக்கோரலை மேற்கொண்டு மருந்துகளைக் கொள்வனவு செய்ய முற்பட்டால் நோயாளர்கள் மரணம் அடைவதைத் தடுக்க முடியாது.

எதிர்கொள்ளநேரும் குற்றச்சாட்டுகளுக்குப் பயந்து அமைச்சரால்கூட இதுதொடர்பான தனியான தீர்மானத்தை மேற்கொள்ள முடியாது. அதனால் நாடாளுமன்றத்தோடு இணைந்ததாக பொறிமுறையொன்றை உருவாக்குவது அவசியமாகும் - என்றார். (எ-இ)

# சட்ட ஆலோசகராலேயே வஞ்சிக்கப்பட்டார் பஸில்

கொழும்பு, நவ. 17

பொருளாதார நெருக்கடிக்கு காரணமானவர்கள் ராஜபக்சகள் என தீர்ப்பு வழங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர் குழாமில் பஸில் ராஜபக்சவின் முன்னாள் சட்டஆலோசகரும் உள்ளடங்கியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதிகளான கோத்தாபய, மஹிந்த ராஜபக்ச, முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச உள்ளிட்ட பெரமுன அரசாங்கத்தினர் என உயர்நீதிமன்றம் கடந்த செவ்வாக்கிழமை தீர்ப்பிட்டது.

இந்த முக்கியத்தும் வாய்ந்த தீர்ப்பை வழங்கிய உயர்நீதிமன்றத்தின் நீதியரசர்களுள் பிரியந்த ஜயவர்த்தனவும் ஒருவர். இவர் பஸில் ராஜபக்சவின் சட்டஆலோசகராக முன்னர் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-6)



# 'அல்லக்கை'களாலேயே மதிப்பிழந்தார் மஹிந்த!

## நீதியமைச்சர் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ.17

போர் முடிவடைந்த பின்னர் தனது பதவிக் காலம் நிறைவுற்றதும் அரசியலிலிருந்து மஹிந்த ராஜபக்ச ஒதுங்கியிருப்பின் மக்களின் தூற்றுதலிலிருந்து அவர் விடுபட்டிருக்கலாம். அவரின் சகாக்களின் தவறான முடிவுகளின் பிரதிபலனையே தற்போது நாம் அனுபவித்து வருகின்றோம்.

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போது நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

போரை முடிவுக்குக் கொண்டுவரவே மஹிந்த ராஜபக்சவை 2005 இல் மக்கள் தெரிவுசெய்தனர். மக்களின் அந்தத் தேர்வு சரியாக இருந்தது. அதற்கான கௌரவம் மக்களிடத்தே அவருக்குக் கிடைத்தது. ஆனால் சூழ இருந்த சகாக்களுடன் இணைந்து அவர் செய்த ஏனைய விடயங்களை மக்கள் ஏற்கவில்லை.

மஹிந்த ராஜபக்ச நிதியமைச்சராகப் பதவி வகித்தபோது நிதி அமைச்சின் செயலாளராக பி.பீ.ஜயசுந்தர நியமிக்கப்பட்டார்.

மத்திய வங்கி ஆளுநர் பதவி அஜித் நிவாட் கப்ராலுக்கு வழங்கப்பட்டது.

இவர்களை அந்தப் பதவிகளுக்கு நியமிக்க வேண்டாம் என 2006 ஆம் ஆண்டில் நான் கூறினேன். எனது கோரிக்கை ஏற்கப்படவில்லை. இவர்களின் தவறான முடிவுகளின் பிரதிபலனை தான் தற்போது நாம் அனுபவித்து வருகின்றோம் - என்றார். (ச-44)

# பாதுகாப்பு அமைச்சுக்கு பட்ஜெட்டில் கூடுதல் நிதி

## வரவேற்கத்தக்கது என்கிறார் பொன்சேகா

கொழும்பு, நவ. 17

முன்வைக்கப்பட்டுள்ள பாதீட்டில் பாதுகாப்பு அமைச்சுக்கு கடந்த வருடத்தை விடவும் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க விடயமாகும் என்று முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:

சிறிய நாடாக இருந்தாலும் பாதுகாப்புக்கு முக்கியத்துவமும், முன்னுரிமையும் வழங்கப்படவேண்டும்.

அந்தவகையில் பாதீட்டில் பாதுகாப்பு அமைச்சுக்கு கடந்த வருடத்தைவிடவும் இம்முறை கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்க விடயமாகும். அதேவேளை அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவு உள்ளிட்ட விடயங்கள் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக்கொண்டே முன்வைக்கப்பட்ட யோசனைகளாகும்- என்றார். (ச-44)

# திராணியற்ற ஆட்சியாளரால் நாட்டை முன்னேற்ற இயலாது

## சிறீதரன் எம்.பி. நாடாளுமன்றில் தெரிவிப்பு

இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் எவரும் திராணியற்றவர்கள். ஆட்சியாளர்களிடம் ஏமாற்று நடவடிக்கை இருக்கும்வரை நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல- சரியான பாதையைத் தெரிவுசெய்யமுடியாது.

- இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்திம் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் 2 ஆம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் சினிமாவில் வரும் வடிவேலுவின் 'வரும் ஆனால் வராது' என்ற பாணியிலேயே ஜனாதிபதியின் பாதீட்டு உரை உள்ளது.

2024 ஜனவரி முதல் அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் எனக் கூறப்பட்டாலும் அது ஏப்ரல் மாதம் முதலே நடைமுறைக்குவரும் என்று கூறப்படுகிறது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயத்தில் இழப்பீடு கொடுத்து விலைபேச எத்தனிக்கப்படுகிறது. ஆனால் அவர்களுக்கு என்ன நடந்தது? போரில் சரணடைந்தவர்களின் கதி என்ன? என்பது தொடர்பில் விளக்கவில்லை.

இந்த நாட்டில் சமாதானத்துக்கான கதவுகள் இறுக மூடப்பட்டுள்ளன. நல்லிணக்கத்துக்கான கதவுகள் 'சீல்' வைக்கப்பட்டுள்ளன. இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டு சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற திராணியும், தைரியமும் ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட ஆட்சியாளர்களுக்கு இல்லை. ஆட்சியாளர்களிடம் ஏமாற்று நடவடிக்கை இருக்கும்வரை, நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல சரியான பாதையைத் தெரிவு செய்யமுடியாது- என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதத் தடைச்சட்டம்

# கோத்தாபய கொண்டுவந்த சட்டத்திருத்தம் வலுவற்றது

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

**கொழும்பு, நவ. 17**

**பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்புவது என 2021ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கொண்டு வந்த சட்டத்திருத்தம் சட்ட வலுவற்றது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

இந்தச் சட்டத்திருத்தத்துக்கு எதிராக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து, ஷெரின் சரூர், சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் ஆகியோர் இணைந்து பொதுநல வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

மதச்சுதந்திரத்தை இந்தத் திருத்தம் கேள்விக்கு உட்படுத்துகின்றது என்றும், மதச்சுதந்திரத்தை இலக்காக வைத்தே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அவர்கள் அந்த மனுவில் சுட்டிக்காட்டினர். இந்த நிலையிலேயே, மேற்படி சட்டத்திருத்தம் நடைமுறைச் சாத்தியமற்றது என்று உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது. அந்தத் திருத்தம் சட்டவலுவற்றது என்றும் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அத்தோடு மனுதாரர்களுக்குத் தலா 25 ஆயிரம் ரூபா இழப்பீடு வழங்கவேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ம-6)

# ராஜபக்சக்களுக்கான தீர்ப்பு ‘நல்ல மாட்டுக்கு ஒரு சூடு’

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



கொழும்பு, நவ.17

நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்த ராஜபக்சக்களுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பானது ஒட்டுமொத்த அரசியல்வாதிகளுக்கும் சிறந்த பாடமாகும் -இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:-

போர் வெற்றியை பயன்படுத்தி முழு நாட்டையும் சொந்தமாக்கிக்கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை ராஜபக்சக்களும், அவர்களின் சகாக்களும் அழித்தனர். நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்தனர்.

அவர்களுக்கு உயர்நீதிமன்றம் வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியுள்ளது.

இந்தத் தீர்ப்பு ஒட்டுமொத்த அரசியல்வாதிகளுக்கும் சிறந்த பாடமாகும்.

அரசியல்வாதிகள் என்போர் நாட்டின் உரிமையாளர்கள் அல்லர். தற்காலிக பொறுப்பாளிகளே. இந்தத் தீர்ப்பால் 220 இலட்சம் மக்களின் அடிப்படை உரிமைகளை ராஜபக்சக்கள் உள்ளிட்ட இந்தக் குழு மீறியுள்ளது என்பது உறுதியாகியுள்ளது - என்றார். (ச-44)

# தேர்தல் சீர்திருத்தங்களில் மக்களின் அபிப்பிராயம்!

## கோருகிறது தேர்தல் ஆணைக்குழு

கொழும்பு, நவ. 17

தேர்தல் சீர்திருத்தம் தொடர்பில் பொதுமக்களின் அபிப்பிராயங்களைக் கேட்டறிவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன்படி பொதுமக்கள், அரசியல் கட்சிகள், பொது நிறுவனங்கள் மற்றும் ஆர்வமுள்ள தரப்புகளிடமிருந்து எழுத்துமூல சமர்ப்பணங்களைப் பெற எதிர்பார்ப்பதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தலில் இளையோரின் பங்களிப்பு, தனியார்துறையினருக்கும் தபால் மூல வாக்களிப்பு ஏற்பாடு. இலத்திரனியல் வாக்குப்பதிவு, வெளிநாடுகளில் வசிப்பவர்களின் வாக்குரிமை, ஒரு வேட்பாளர் மாகாணசபைத் தேர்தல் பொதுத்தேர்தல் இரண்டிலும் போட்டியிட்டு இரண்டிலும் வெற்றியீட்டும் சந்தர்ப்பத்தில் அவரது நிலைப்பாடு, தேர்தல் காலத்தில் ஏற்படும் பணப்பரிமாற்றத்தைக் குறைத்தல், பல்கட்சி ஆட்சி முறைமையைப் பலப்படுத்தல், அரசியல் கட்சிகள் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புதல், பொறுப்புக்கூறும் தலைமைத்துவம் போன்ற விடயங்கள் தொடர்பில் கருத்துகளைப் பகிரலாம்.

பிரேரணைகளையும், ஆலோசனைகளையும் எழுத்து மூலம் எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு தேர்தல் ஆணைக்குழு கேட்டுள்ளது. (ச-6)

# தகவல்தொழில்நுட்ப மையம் கிழக்குப் பல்கலையில் ஆரம்பம்

மட்டக்களப்பு, நவ. 17

அமெரிக்க கனவுக் கல்லூரியும் மட்டக்களப்புப் பல்கலைக்கழகமும் இணைந்து தகவல்தொழில்நுட்ப மையத்தை கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்துள்ளன.

அமெரிக்கத் தூதுவர் ஜூலிசங்கும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும் இணைந்து கடந்த புதன்கிழமை இதைத் திறந்து வைத்துள்ளனர்.

இந்தத் தொழில்நுட்ப மையத்தில் பரந்துபட்ட தகவல்களை இலவசமாகப் பெற்றுக் கொள்ளமுடியும். மாணவர்களும், ஆராய்ச்சியாளர்களும் கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி போன்ற விடயங்களில் கலந்துரையாடல்களையும், கருத்தரங்குகளையும் இங்கு நடத்த முடியும். திறன் விருத்தி தொடர்பான கலந்துரையாடல்களை இங்கு இலவசமாக நடத்த முடியும். இலங்கையில் ஆரம்பிக்கப்படும் ஐந்தாவது அமெரிக்க கனவுக்கல்லூரி இது. ஏற்கனவே கொழும்பு, கண்டி, மாத்தறை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் அமெரிக்க கனவுக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ([illegible])

# தினம் தெரியுமோ?

**கொ**க்குவிலில ஒரு பள்ளிக்கூடத்தில ரீச்சர்மார் குத்தாட்டம் போட்டவையெண்டு ஒரு கதை கடுமையா பேஸ்புக்கில ஓடிக்கொண்டிருக்கு. அதுக்கு நடவடிக்கை எடுக்கச் சொல்லி வடக்குமாகாண சபையில எதிர்க்கட்சித் தலைவரா இருந்த தவராசா கூட 'வெட்கித் தலைகுனிஞ்சு' கடிதம் எழுதிற அளவுக்கு, அப்பிடி என்னதான் ரீச்சர்மார் குத்தாட்டம் போட்டிருக்கினம் எண்டு பட்சியும் அந்த டான்ஸ் வீடியோவைப் பாத்தது. தவராசாவின்ர கடிதத்தின்படி, குறைஞ்சபட்சம் அந்தக் குத்தாட்டம் ஜெயிலர் படத்தில 'காவாலா' பாட்டுக்கு தமன்னா ஆடின அளவுக்கு இருக்குமெண்டு பார்த்தால், சின்னப்பிள்ளையள் 'புள்ளிப் புள்ளி மானே' எண்ட பாட்டுக்கு ஆடினமாதிரித்தான் அந்த வீடியோ இருந்திச்சு. கிட்டத்தட்ட அதில ஆடின ரீச்சர்மாரெல்லாம் சின்னப்பிள்ளையள மாதிரி, அபிநயம் செய்யினமே தவிர விரசமா ஒரு அசைவு கூட செய்யேலை. இதைப் பார்த்து ஏன் இவையள் இப்பிடி 'வெட்கித் தலைகுனியினம்?' எண்டதுதான் விளங்கேலை.

பள்ளிக்கூடம் எண்டால் ரீச்சர்மாரெல்லாம் எப்பவும் கையில பிரம்போடையும், முகத்தில சினத்தோடையும் நிக்கிற காலமெல்லாம் மலையேறிப்போட்டுது. அப்பிடி எந்தநேரமும் பிள்ளையளை வெருட்டிப் படிப்பிக்கிறதும் சரியான அணுகுமுறை இல்லை. அதுவும் ஆரம்பப் பிரிவுக்கு படிப்பிக்கிறதெண்டால், அந்தச் சின்னப் பிள்ளையள் மாதிரி ரீச்சர்மாரும் தங்களை மாத்திக் கொண்டு படிப்பிச்சாத்தான் அது பிள்ளையளின்ர மனசில டக்கெண்டு பதியும். அதுதான் இப்பத்தைய லேட்டஸ்ட் கற்பித்தல் உத்தி. அதைத்தான் மேடையில ரீச்சர்மார் செய்திருக்கினம். கொஞ்சம் சிக்கலெண்டாலும் அந்த டான்ஸுக்கு போட்ட சினிமாப் பாட்டுக்கூட ஆகமோசமான பாட்டில்லை. இதைவிட மோச மான பாட்டெல்லாம் கோயில் திருவிழாக்களில நடக்கிற கோஷ்டியளிலையே சர்வசாதாரணமாப் பாடுகினம். அதுகளோட ஒப்பிடேக்க இந்த 'காதல் வைபோகமே காணும் நன்னாள் இதே.. பாட்டு எவ்வளவோ பரவாயில்லை. ஆனாலும் அதை தவிர்த்திருக்கலாம் தான். இதையெல்லாம் விரசம், குத்தாட்டம், ஆபாசம் எண்டு வெட்கித் தலைகுனியிறவை முதல்ல நாட்டு நடப்புக்கு ஏத்தபடி தங்களை 'அப்டேட்' பண்ணோனும். ஏனெண் டால் சும்மா ஒரு பாட்டுக்கு சின்னப்பிள்ளையள் மாதிரி ஆடினதையே, ஆபாசம் எண்டுறளவுக்குத்தான் அவையின்ர உலகஞானம் இருக்குப் போல. அப்பிடியெண்டால் இதே பாட்டுக்கு பள்ளிக்கூடப் பிள்ளையள், இதே அபிநயத்தோட ஆடினால் அதையும் ஆபாசம் எண்டுவினமோ?

ஒரு சின்னக்கதை சொன்னால் எல்லாம் வடிவா விளங்கும். ஒருத்தர் வாழைப்பழம் வாங்க எல்லா இடமும் அலைஞ்சு திரிஞ்சிருக்கிறார். ஒரு கடையிலையும் வாழைப்பழம் இல்லை, எல்லா இடமும் காய்தான் தொங்கிக் கொண்டிருந்திருக்கு. கடைசியா ஒரு கடையில போய் 'என்னண்ணை, எல்லாக் கடையிலும் வாழைக் காய் தான் இருக்கு, பழுத்த பழத்தை ஒரு கடையிலும் காணேலாமல் கிடக்கு' எண்டு சொல்லியிருக்கிறார். அதுக்கு அந்தக் கடைக்காரன் 'அண்ணை, முதல்ல நீங்கள் போட்டிருக்கிற கூலிங் கிளாஸைக் கழட்டிப் போட்டு பழத்தைப் பாருங்கோ' எண்டு சொன்ன பிறகுதான், பழம் வாங்க வந்தவருக்கு விசயம் விளங்கியிருக்கு. ஆள் போட்ட கூலிங் கிளாசால தான் பழமெல்லாம் அவருக்கு காயாத் தெரிஞ்சிருக்கு. அதை மாதிரித்தான் கொக்குவில் ரீச்சர்மாரின்ர டான்ஸ் புரோக்கிராமையும், குத்தாட்டமாக்கினதும் இப்பிடிப் பார்வைப் பிழையாலதான் போல. அதுக்காக இப்பத்தை பள்ளிக்கூடங்களில கேடுகெட்ட ஆட்டங்கள், கூத்துகள் நடக்கேல எண்டு பட்சி சொல்ல வரேல, ஆனால் அந்த வரிசைக்குள்ள கொக்குவில் பள்ளிக்கூட டான்ஸைச் சேர்க்கிறது அவ்வளவு பொருத்தமில்லை. இதைப் பிழை எண்டால் இனிமேல் ரீச்சர்மார் வகுப்பில பிள்ளையளுக்கு சிறுவர் பாடல்களுக்கு டான்ஸ் பழக்கினால் கூட அதையும் குத்தாட்டம் எண்டு ஒரு கும்பல் கிளம்பினாலும் கிளம்பிடும் பாருங்கோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அவுஸ்திரேலியா இறுதிக்குள்

**உலகக்கிண்ணத் தொடரில் நேற்று இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் தென்னாபிரிக்காவைத் தோற்கடித்து இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றது அவுஸ்திரேலிய அணி. குஜராத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும் இறுதியாட்டத்தில் இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் மோதவுள்ளன.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரரான பவுமா நேற்றும் ஏமாற்றினார். ஓட்டமெதையும் பெறாது அவர் ஆட்டமிழந்தார். ஸ்ராக், ஹேசில்வூட்டின் வேகத்தில் தென்னாபிரிக்காவின் முன்வரிசை தவிடுபொடியானது. குயின்டன் டி ஹொக் 3, வான் டெர் டசன் 6, மார்க்ரம் 10 என அடுத்தடுத்து பவிலியன் திரும்ப தென்னாபிரிக்க அணி 24 ஓட்டங்களில் 4 இலக்குகளை இழந்து பரிதவித்தது. கிளாசன், மில்லர் இணைந்து அணியைச் சரிவில் இருந்து மீட்டனர். பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது தென்னாபிரிக்கா. 47 ஓட்டங்களுடன் ஹெட்டின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார் கிளாசன். மார்க்கோ ஜான்சன் வந்த வேகத்தில் கோல்டன் டக் முறையில் பவிலியன் திரும்ப தென்னாபிரிக்கா மீண்டும் சரிவுகண்டது. எனினும் மில்லர் மட்டும் அணியைக் கரைசேர்க்கப் போராடிக் கொண்டிருந்தார். சதம் கடந்த மில்லர் 101 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதையடுத்து 212 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது தென்னாபிரிக்கா.

பந்துவீச்சில் ஸ்ராக், கம்மின்ஸ் இருவரும் தலா 3 விக்கெட்களைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணிக்கு அதன் ஆரம்ப வீரர்கள் பலமான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர். பெறப்பட வேண்டிய ஓட்டங்கள் மிகச் சொற்பமாக இருக்கையில், 6 ஓவர்களில் 60 ஓட்டங்களைத் தொட்டது ஆஸி. வோர்ணரை வெளியேற்றினார் மார்க்ரம். அதன் பின்னர்தான் கதையே ஆரம்பித்தது. உடைந்த ஆடுகளத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி சுழல் வீரர்கள் வேடிக்கை காட்டினார்கள். பந்து அங்கும் இங்கும் திரும்ப பரதம் ஆடினார்கள் அவுஸ்திரேலியர்கள். மிச்செல் மார்ஷ் ஓட்டமெதையும் பெறாத நிலையில் வீழ்த்தப்பட்டார். ட்ராவிஸ் ஹெட் 62 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப அதலபாதாளத்தில் வீழ்ந்தது ஆஸி. மக்ஸ்வெல் 1, லபுஷேன் 18 என ஏமாற்றினார்கள். எனினும், சிமித், மிச்செல் ஸ்ராக், பட் கம்மின்ஸ் ஆகியோரின் நிதானத்தால் ஒருவாறாகத் தென்னாபிரிக்காவை மூன்று விக்கெட்டுக்களால் வீழ்த்தியது ஆஸி. (ம)





- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- மெகா பரிசு கூப்பன் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்பமுடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.


# பாக். அணிகளுக்கு புதிய தலைவர்கள்!

பாகிஸ்தான் அணியின் தலைமைப் பொறுப்பிலிருந்து பாபர் அசாம் விலகியுள்ள நிலையில், புதிய அணித்தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி ரி-20 ஆட்டங்களுக்கு ஷகீன் ஷா அப்ரிடியும், டெஸ்ட் ஆட்டங்களுக்கு ஷான் மசூத்தும் தலைவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். ஒருநாள் ஆட்டங்களுக்கான அணித்தலைவர் அறிவிக்கப்படவில்லை. அநேகமாக ரிஸ்வான் அந்தப் பொறுப்பில் அமர்த்தப்படலாம் என்று கருதப்படுகின்றது. (ம)




## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## 2024 ஆம் ஆண்டிற்கான
## 1வது மீள்கேள்வி அறிவித்தல் - திருத்தம்

2024ஆம் ஆண்டுக்கான பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடை, பொது மலசலகூடங்கள் தொடர்பாக 14.11.2023ம் திகதிய உதயன், தினக்குரல், வலம்புரி ஆகிய பத்திரிகை விளம்பரத்தில் தவறுதலாக கீழ்குறிப்பிட்ட இணுவில் சந்தை கோழிக்கடைக்குப் பதிலாக இணுவில் ஆட்டிறைச்சிக்கடை என பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதனை கீழ்குறிப்பிட்ட அட்டவணையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

| தொ. இ | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT,NBT தவிர) | மீளளிக்க கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT தவிர) | மாத வாடகை (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|---|
| | உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1 | இணுவில் கோழிறைச்சிக்கடை | 750.00 | 7,500.00 | 305.550.00 | 250.00 |

திருமதி சாரதா உருத்திரசம்பவன் 17.11..2023
செயலாளர்
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(GN41033) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வாக்குவேட்டையின் பலியாடுகள்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த திங்கட்கிழமை அடுத்த ஆண்டுக்கான வரவு –செலவுத் திட்டத்தை முன்வைத்தார். அவரது வரவு – செலவுத் திட்ட உரையில் பல விடயங்களையும் சுட்டிக்காட்டியிருந்தார். கடந்த காலங்களில் வழங்கப்பட்ட அரசியல் நிவாரணங்களே நாட்டைக் கெடுத்து குட்டிச்சுவராக்கியது என்றார். அப்படிப்பார்த்தால், அவரும் அவரது கட்சியும் கூட இதற்குப் பொறுப்பானவர்களே. அவர்களும் கடந்த காலங்களில் இத்தகைய அரசியல் நிவாரணங்களை வழங்கியே வாக்குகளைச் சுருட்டினர். இப்போது முன்வைக்கப்பட்ட வரவு –செலவுத் திட்டம்கூட தேர்தலுக்கானது என்பது அப்பட்டமானது. நீதிஅமைச்சர் விஜயதாஸ, அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெறும் ஆனால் இந்த வரவு–செலவுத் திட்டம் தேர்தலுக்கானது அல்ல என்று கூறுகிறார். அவர்கள் சத்தியம் செய்தால்கூட எவரும் அதை நம்பத் தயாரில்லை. ஜனாதிபதித் தேர்தலை நடத்தி மக்கள் ஆணையைப் பெறுவதற்கு ரணில் முயல்கின்றார். அது வெளிப்படையானது. அந்தத் தேர்தலுக்காக அவர் வழங்கியுள்ள 'அரசியல் நிவாரணமே' அரச பணியாளர்களுக்கான கொடுப்பனவு உயர்வு. 10 ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவுப்படியை அதிகரித்திருக்கின்றார். அதுவும் அடுத்த ஆண்டு ஏப்ரலில் இருந்து கிடைக்கும். நிலுவைத் தொகை ஒக்ரோபரிலிருந்து 6 மாதங்களில் கிடைக்கும். இந்தச் 'சூத்திரம்'அரச பணியாளர்களுடன் ரணில் போடும் ஒருவகை 'டீல்' தான். நீங்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தால் உங்களுக்குக் கொடுப்பனவு கிடைக்கும். இல்லையேல் நீங்கள் 'அம்போ'தான் என்ற செய்தியையே இந்த பாதீடு மூலம் சொல்லாமல் சொல்கிறார் ரணில்.

ரணில் ஆரம்பித்துள்ள இந்த 'அரசியல் நிவாரணம்' ஆபத்தானது. நிச்சயமாக அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில், ரணிலை எதிர்த்துக் களமிறங்கும் எந்தவொரு வேட்பாளரும் இதைவிட அதிகமான சலுகையையே முன்வைக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அரச பணியாளர்கள், தேர்தல்களின்போது செல்வாக்குச் செலுத்துபவர்கள். அவர்களில் பெரும்பான்மையானோர் தபால்மூலம் வாக்களிப்பவர்கள். மக்களிடையே கருத்துருவாக்கிகள் அவர்கள் தான். எனவே அரச பணியாளர்களை இலக்கு வைத்து கடந்த காலங்களிலும் பல 'அரசியல் நிவாரணங்கள்' எல்லோராலும் வழங்கப்பட்டன. எனவே ரணிலை எதிர்த்துக் களமிறங்கும் வேட்பாளர், அரச பணியாளர்கள் கோரியதைப்போல 20 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை அறிவித்தாலும் ஆச்சரியப்பட முடியாது. அதற்குப்போட்டியாக ரணிலும் மீண்டும் ஏதாவது சலுகை வலை விரிக்கக்கூடும்.

இந்தக் கட்டுமட்டற்ற 'அரசியல் நிவாரண' போட்டி மீண்டும் நாட்டைச் சீரழிக்கப்போகின்றது. பொருளாதாரப் புதைகுழிக்குள் சிக்கியுள்ள இந்த நாடு அதிலிருந்து மீளப்போவதில்லை என்பதே தெளிவாகின்றது. மீண்டும் மீண்டும் அந்தச் சகதிக்குள் சிக்க வைப்பதற்கான பிள்ளையார் சுழியையே ரணில் இப்போது போட்டிருக்கின்றார். அவரின் 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவு அதிகரிப்பு நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இவை எல்லாவற்றுக்கும் அப்பால் 'அரசியல் நிவாரணத்தால்' மக்கள்தான் பெரும் சிக்கலை எதிர்கொள்ளப்போகின்றனர். அரச பணியாளர்கள் நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 6 சதவீதத்தினரே. அவர்களுக்கான சலுகைகளால் ஏற்படும் துன்பங்களை 94 சதவீத மக்களுமே சுமக்கப்போகின்றனர். இவர்களுக்கான தாறுமாறான சம்பள அல்லது கொடுப்பனவு உயர்வுகளின் பாதிப்புகள் சாதாரண மக்களின் தலையில் தான் இடியாக இறங்கி வதைக்கப்போகின்றன என்பது மட்டும் நிச்சயம். இவை எவற்றையும் சிந்திக்காது தேர்தல் வாக்குகளைச் சூறையாடும் குறுகிய எண்ணத்துடன் செயற்படும் அரசியல் தலைவர்கள் இருக்கும் வரை, இந்த நாடு முன்னேறப்போவதில்லை.

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023

"இந்த உலகத்தில் அழகானது எதுவுமே இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். எப்போதும் உங்களை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு ஒரு மரத்தின் தோற்றத்தில், ஒரு இலையின் அசைவில் ஏதோவொன்று இருக்கும்."

- அல்பேட் சுவைற்சர் (பிரான்ஸ் தத்துவவியலாளர் - சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்)






# கழுத்தை இறுக்கினாலும் மீண்டுவர வழியில்லை!

### ஐ.எம்.எப். நிபந்தனைகள் குறித்து அமைச்சர் நிமால் விளக்கம்

**கொழும்பு, நவ.17**

**சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் காரணமாக மக்கள் பெரும் நெருக்கடியைச் சந்தித்தாலும், மாற்றுவழிகள் எவையும் இல்லை என்று தெரிவித்துள்ளார் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா.**

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்காமல் இருந்திருந்தால் எமக்கு நாடாளுமன்றம் என்ற ஒன்று இருந்திருக்காது.

சர்வதேச நாணயநிதியத்திடம் உதவி கோருமாறு அவர் முன்னரே குறிப்பிட்டார். ஆனால் நாம் அதற்குச் செவிசாய்க்கவில்லை. அதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகள் கடினமானவை. அதனாலேயே மின்கட்டணம், நீர்க்கட்டணம் போன்ற பல கட்டணங்களில் மாற்றம் கொண்டுவரப்படுகின்றது. எதிர்க்கட்சியும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டுள்ளது.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் தற்போதுள்ள வேலைத்திட்டத்தையே முன்னெடுக்கவேண்டும். அதனால் மக்களைக் குழப்பும் வகையில் கருத்துகளை வெளியிட வேண்டாம் - என்றார். (எ-இ)

# நீதிமன்றத்தீர்ப்புக்கு மதிப்பளிக்கிறோம்!

### மஹிந்த தெரிவிப்பு



கொழும்பு, நவ. 17

நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அதற்கு எதிராக நாம் செயற்படமாட்டோம் என்று பொதுஜன பெரமுன கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை மதிக்கவேண்டும். நீதிமன்றத்துக்கு எதிராக எம்மால் செல்லமுடியாது. குறிப்பாக நான் சட்டத்தரணி என்பதால் அவ்வாறு செயற்பட முடியாது. மக்களுக்காக நாம் எந்நேரத்திலும் முன்னிலையாவோம்- என்றார். (ச-44)

**நாளை** 18.11.2023 சனிக்கிழமை கார்த்திகை 02

சுபநேரம் : 03.08 - 04.38
ராகுகாலம் : 09.08 - 10.38

கந்தசஷ்டி நிறைவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் கூடுதல் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும் வார்த்தைகளில் கவனம் தேவை.

**மிதுனம்** : மனதில் இனம் தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும்,

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள்.

**கன்னி:** நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன்-மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

## மானிய உரக் கொடுப்பனவுகள்

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போகச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு மானிய உரத்துக்கான கொடுப்பனவுகள் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளன என்று கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக 5 ஆயிரத்து 760 விவசாயிகளுக்கே இந்தக் கொடுப்பனவுகள் வைப்பிலிடப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-113)

# அன்னையின் நினைவில் ஏழு ஆண்டுகள்



அமரர் திருமதி செல்லத்துரை

## தெய்வானைப்பிள்ளை

மலர்வு 13.09.1935

உதிர்வு 17.11.2016

பாலூட்டி தாலாட்டி சீராட்டி வளர்த்த தாயே
நெஞ்சினிலே என்றும் நீங்காமல் நீ இருந்து
எம் நினைவிலே கலந்திருக்கும் நினைவுகள்
என்றென்றும் பசுமையாய் பதிந்திருக்க
மறைந்து ஆண்டுகள் ஏழு கழிந்தாலும்
நெஞ்சிலே நீ இருப்பாய்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**உங்கள் பிரிவால் வாடும்:**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.**

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 02 . 1935



மறைவு 09 . 11 . 2023

## சுப்பிரமணியம் மகேஸ்வரி

யாழ்.மட்டுவில் தெற்கு வாகையடியைப் பிறப்பிடமாகவும். பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் மகேஸ்வரி அவர்கள் கடந்த (09.11.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு நல்லமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் ஆருயிர் மனைவியும், அற்புதராணி (பிரான்ஸ்), மகேஸ்வரன் (கனடா), கிருபாராணி (பிரான்ஸ்), மனோகரன் (சுவிஸ்), மகேந்திரன் (பிரான்ஸ்), நவராணி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பவளராஜா (பிரான்ஸ்), உதயகுமாரி (கனடா), பரமதேவன் (பிரான்ஸ்), சாந்தமலர் (சுவிஸ்), மதிவதனா (பிரான்ஸ்), திருமால் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், பாக்கியம், நல்லையா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற ராமச்சந்திரன் மற்றும் சிவபாக்கியம், பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2023) வெள்ளிக்கிழமை பிரான்ஸில் நடைபெறவுள்ளது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**பிரான்ஸ்.**

CS 26979

## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
## வழங்குநர்களையும் ஒப்பந்ததாரர்களையும் பதிவு செய்தல் - 2024

சபையானது 2024 ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங் களை ஏற்கவுள்ளது.

### பொருட்கள்

01. காகிதாதிகள், எழுது பொருட்கள்
02. அலுவலக உபகரணங்கள்
03. அலுவலக தளபாடங்கள் மரம் / இரும்பு / பிளாஸ்றிக் ஏனையவை
04. இதர (others) மற்றும் வீட்டு உபயோகப்பொருட்கள்
05. மின்சார, மின் பாவனைப்பொருட்கள் மற்றும் மின்னணுப் பொருட்கள்
06. வன்பொருட்கள் கற்கள், மணல், கிரவல் ஏனையவை மற்றும் கட்டுமானப்பொருட்கள்
07. விவசாய இயந்திர சாதனங்கள் மற்றும் உள்ளீடுகள்
08. புடவை வியாபாரம் (டெக்ஸ்டைல்ஸ், பொருட்கள் மற்றும் திரைச்சீலைகள்)
09. விளையாட்டுப்பொருட்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள்
10. ஆலை மற்றும் இயந்திரங்கள்
11. சிற்றுண்டிகள் மற்றும் உணவுகள் வழங்கல்
12. மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்து வழங்கல்
13. நூலகங்களுக்கான நூல்கள்
14. தீந்தைகள் வகைகள் (Paints), நிறம் தீட்டும் பொருட்கள்
15. நீர் வழங்கும் குழாய்கள், கியூம் பைப்புகள் (Hume Pipe) மற்றும் ஏனைய பொருட்கள்
16. வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் துணைப் பொருட்கள்
17. எரி பொருட்கள், உராய்வு நீக்கிகள்
18. இரும்பு பொருட்கள்
19. தீராந்திகள், பலகைகள்
20. பனைமரங்கள், சலாகைகள்
21. வாகனங்களுக்கான டயர், ரியூப் மற்றும் மின்கலங்கள்
22. கணினி, பிரதியாக்கல் இயந்திரத்திற்கான உதிரிப்பாகங்கள் மற்றும் உள்ளீடுகள்
23. சுத்திகரிப்பு பொருட்கள், கிருமி நாசினிகள்
24. பாதணிகள், தோற்பொருட்கள்
25. அலங்காரப்பொருட்கள்
26. இலத்திரனியல் பொருட்கள்
27. மோட்டார் வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள்

### சேவைகள்

01. அலுவலக உபகரணங்கள் பழுது பார்த்தல்
02. அலுவலக தளபாடங்கள் பழுதுபார்த்தல்
03. வாகனங்கள் பழுதுபார்த்தல்
04. மின்சார மற்றும் மின்னியல் பொருட்களின் பழுதுபார்த்தல்
05. அனைத்துவகையான அச்சிடுதல் மற்றும் புத்தகங்கள் கட்டுதல்
06. வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல்
07. வாடகைக்கு அலுவலக உபகரணங்களை பெற்றுக்கொள்ளல்
08. ஒளி மற்றும் ஒலி அமைப்பு மற்றும் மின்சாரபொருட்களை வாடகைக்குப்பெற்றுக்கொள்ளல்
09. பாதுகாப்பு மற்றும் துப்பரவு சேவைகள்
10. வர்ணம்தீட்டும் வேலைகள்
11. ஒட்டுவேலைகள், உலோக வேலைகள் (வெல்டிங்வேலைகள்)
12. மின்சாதனங்கள் திருத்தம், மீள மின்வலுவூட்டல் (Battery Charge)
13. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
14. வாகனங்களின் ரியூப் ஒட்டுதல்
15. வாகன சுத்திகரிப்பு மேற்கொள்ளல்
16. கோலவுடை, சீருடை தைத்தல்
17. கணினி பிரதியாக்கம் இயந்திரம் திருத்தல், சுத்திகரிப்பு (Service)
18. இறப்பர் முத்திரை தயாரித்தல்
19. வாகனங்கள் திருத்தம் செய்தல்
20. கழிவகற்றல் சேவைகள்

### ஒப்பந்த வேலைகள் (ICTAD பதிவு உள்ளவர்கள் மட்டும்)

01. கட்டட நிர்மாணம் மற்றும் மறுசீரமைப்பு வேலைகள்
02. நீர்பாசனம், நெடுஞ்சாலை, பாலம் மற்றும் நீர்வழங்கல் கிணறு மற்றும் குழாய்கிணறு அமைத்தல்
03. வீதி நிர்மாணம், திருத்த வேலைகள்

- பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.
- விண்ணப்பபடிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் முன் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 உடன் அரசவரிகளையும் சேர்த்து ரூபா 1150.00 செலுத்தப்படல் வேண்டும்.
- விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வழங்கல்/ஒப்பந்த சேவைக்கான விண்ணப்பம் - 2024" எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் செயலாளர், தலைமைக் காரியாலயம் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா. எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
- விண்ணப்படிவங்கள் 18.12.2023 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.
- காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
- மேலதிக விபரங்களுக்கு 024-2225737/024-2050067 எனும் அலுவலக தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**செயலாளர்,**
**வவுனியா தெற்கு, தமிழ் பிரதேச சபை,**
**வவுனியா.**

(cr.41017) (N.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீரழிவுச் சோதனை முகாம் யாழ்ப்பாணத்தில் நாளை

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு யாழ்.நீரிழிவுக் கழகம் நடத்தும் இலவச நீரிழிவுப் பரிசோதனை முகாம் யாழ்.போதனா மருத்துவமனை முன்பாக கொமர்ஷல் வங்கி அருகே நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை இடம்பெறவுள்ளது.

இந்த முகாமை யாழ்.மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் மருத்துவர் இ.சுரேந்திரகுமரன் ஆரம்பித்து வைக்கவுள்ளார். இதில் நீரிழிவுப் பரிசோதனை, பி.எம்.ஐ. உடற்திணிவுச் சுட்டி, இரத்த அழுத்தம், கண்பரிசோதனை, வாசிப்புத் திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு இலவசமாக வாசிப்புக் கண்ணாடி வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன. முகாமில் சகலரும் பங்கேற்று பயன்பெறுமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

(ச)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் திருமதி பொலிண்டஸ்
அவர்களின் தந்தையார்

S.N.J. **மரியாம்பிள்ளை** அவர்கள்

15.11.2023 அன்று இறைபதமடைந்தார் அவரது
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்
யா/ மத்திய கல்லூரி

(cs:52853) (N 1)

## இருபத்துநான்காம், பத்தொன்பதாம் ஆண்டு நினைவலைகள்


செல்வன்
பாலகிருஷ்ணன் பிரதீபன்
தோற்றம் : 17.04.1981


செல்வன்
சிவநாதன் ரவிசங்கர்
தோற்றம் : 02.02.1981


செல்வன்
சுந்தரலிங்கம் சிவோத்தமன்
தோற்றம் : 23.03.1981


செல்வன்
பூரணமூர்த்தி கந்தர்வன்
தோற்றம் : 11.05.1981


செல்வன்
மரியரட்ணம் குணரட்னம்
தோற்றம் : 04.08.1981

**17.11.1999 : மறைவு** **17.05.2004**

**இந்நாளில் ஹாட்லியின் மைந்தர்கள் ஆகிய நாம் உங்களை பெருமையுடன் நினைவு கூருகின்றோம்.**

**இன்று 17.11.2023 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் இன்பர்சிட்டி கடற்கரையில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி இடம்பெறும் நினைவு கூரல் நிகழ்வை தொடந்து காலை 9.00 மணியளவில் கல்லூரியில் இரத்தான நிகழ்வும் நடைபெறும்.**

**ஆர்வமுள்ளவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

"ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு நிதியம்" ஏற்பாட்டாளர்கள்.
தொடர்பு : அ.டொமினிக் - 0774 666 259 / சு. கோகுலகுமார் - 0773 122 198 E-mail : hartleyboys@gmail.com

# மரண அறிவித்தல்

## சிவக்கொழுந்து ஞானசுந்தரம்



தோற்றம் 20.06.1938 மறைவு 04.11.2023

தண்ணீர்தாழ்வு கட்டுவனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் பிரான்ஸ் நெய்ஸ் லி குறோத் நகரில் (Noisy le Grand) வாழ்ந்தவரும் தற்போது லண்டன் குறோய்டன் நகரல் (Croydon) வசித்தவருமான சிவக்கொழுந்து ஞானசுந்தரம் கடந்த 04.11.2023 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா அன்னப்பிள்ளை தம் பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற ஞானசுந்தரம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பூரணம், கதிரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரியும், கலாவின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ராஜ்குமார் பெனடிக்ற்றின் அன்பு மாமியாரும், டிவினியாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (18.11.2023) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 4.00 மனிவரை Asian Funeral Carc 66 /67, Monarch Parade, London Rd, Mitcham CR4 3HB என்னும் இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (19.11.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் 11.30 மணிவரை Asian Funeral Carc 66 /67, Monarch Parade, London Rd, Mitcham CR4 3HB என்னும் இடத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் South London Crematoriun, Rowan Rd, London SW16 5JG என்னும் இடத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கலா**
(0044 7477 392568 - லண்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம். ஆதனவரி (சோலைவரி) செலுத்துதல் தொடர்பான அறிவித்தல்

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் ஆதனவரி செலுத்தும் நடைமுறை கணனி மயப்படுத்தப்பட உள்ளது. அதற்குரிய தொழிநுட்ப வேலைகள் இவ்வருடம் டிசம்பர் மாதம் இடம்பெற உள்ளதனால் அதற்கான நடவடிக்கைகளின் பொருட்டு 2023.12.01 ம் திகதி தொடக்கம் 2023.12.31 ம் திகதி வரை ஆதனவரி (சோலைவரி) செலுத்தும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளன. எனவே 2023 ம் ஆண்டுக்கான ஆதனவரிகளை 30.11.2023 ம் திகதிக்கு முன்னர் செலுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**செயலாளர்.**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.**

(cr.41029) (N.1)

## பொது மன்னிப்புக்கோரல்

தேசிய ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை 191 (1) பிரிவின் கீழ் கௌரவ நீதி மன்றத்தின் ஆணையின் பிரகாரம் பொது மன்னிப்பு கோரல்.

அ.பகவத்கீதன் ஆகிய நான் செட்டிகுளத்தில் நடத்தி வரும் "சனா பார்மசி" தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தலும் அதிகாரச்சபை சட்டத்தின் பிரிவுகள் 131 (1) இ 131 (1) உ பிரிவை மீறி உரிமம் ஒன்றை பெறாமல் நடத்திய குற்றத்திற்காக வவுனியா நீதிவான் நீதிமன்றத்தால் வழக்கு இல. 53838 இன் கீழ் நான் குற்றவாளி என விதிக்கப்பட்ட 10000/- அபராத தொகையை செலுத்தியிருக்கின்றேன்.

மேலும் நீதிமன்றத்தின் ஆணைப்படி நான் இழைத்த குற்றத்திற்கு இலங்கை பொதுமக்கள் சகலரிடமும் மன்னிப்பு கோருவதுடன் மீண்டும் இத்தகைய குற்றங்கள் நடைபெறாமல் பார்த்துக்கொள்வேன் என்றும் உறுதியளிக்கின்றேன்.

**அ.பகவத்கீதன்**
**சனா பார்மசி,**
**மன்னார் வீதி, செட்டிக்குளம்.**

(25821) (N.1)

## மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்



Best Wishes

Congratulations

### திருமதி தர்மஞானேஸ்வரி குணரத்தினம்
### ( ஆசிரியர் - SLTS - I)

சேவைக்காலம்

- யா/ கரம்பைக் குறிச்சி அ.த.க.பாடசாலை - 22.03.1990 - 19.04.1996
- மு/ பாண்டியன் குளம் மகாவித்தியாலயம் - 20.04.1996 - 27.04.1997
- யா/ கரம்பைக் குறிச்சி அ.த.க.பாடசாலை - 28.04.1997 - 17.09.2007
- மு/ மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயம் - 18.09.2007 - 26.11.2009
- யா/ கரம்பைக்குறிச்சி அ.த.க.பாடசாலை - 27.11.2009 - 03.04.2012
- யா/ வரணி வடக்கு அ.த.க.பாடசாலை - 04.04.2012 - 01.01.2019
- யா/ நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம் - 02.01.2019 - 16.11.2023

**எமது பாடசாலையில் ஆசிரியராக அரும்பணியாற்றி 17.11.2023 இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியருக்கு இனிய மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றோம்.**

Congratulations

**பாடசாலைச் சமூகம்**
**யா/ நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயம்**

(cr.41009) (N.1)

## பெண் ஊழியர் தேவை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிரபல அழைப்பிதழ் நிறுவனத்திற்கு Sales and Marketing பெண் ஊழியர் தேவை.

**077 815 2693**

(cr.52851) (N.1)

## வேலையாள்கள் தேவை

வவுனியா நகரில் இயக்கிவரும் **புடைவை** நிறுவனத்திற்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை. வவுனியா நகரிற்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**T.P.: 078 763 1151**

## கரைதுறைப்பற்று பிரதேச சபை
## 2024 ஆம் ஆண்டுக்கான வழ்ங்குனர்களையும், ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல்.

கரைதுறைப்பற்று பிரதேசசபையின் 2024 ஆம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிடப்பட்ட பொருட்கள். சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குனர்கள். உற்பத்தியாளர்கள். ஒப்பந்தகாரர்கள் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் வியாபார நிறுவனங்கள் மற்றும் சேவையாளர்கள் ஆகியோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 17.11.2023 தொடக்கம் விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விண்ணப்பப் படிவக்கட்டணம் ரூபா 50.00ம். விண்ணப்பப் பதிவுக்கட்டணமாக ரூபா 1500.00ம் (VAT, NBT நீங்கலாக) செலுத்துதல் வேண்டும். அத்தோடு கட்டடநிர்மாண வேலைகளுக்கு கீழேயுள்ள கட்டண விபரங்களுக்கு ஏற்றவாறு கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 01.12.2023 ஆம் திகதி வரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தொகுதிகள் :**

தொகுதி "A" - பொருட்கள் வழங்குதல் (பொது)
தொகுதி "B" - சேவைகள் வேலைகள்
தொகுதி "C" - வாகன "திருத்தமும் சுத்திகரிப்பு செய்தலும்
தொகுதி "D" - குடிசார் வேலைகள்

| தொ. இல | பொருட்கள் வழங்கல் (பொது) |
|---|---|
| A - 01 | காகிதாதிகள் எழுதுபொருட்கள் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 02 | தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/இரும்பு/உருக்கு) |
| A - 03 | கணினிகள்,கணினியுடன் தொடர்புடைய ஏனைய உபகரணங்கள் தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய டோனர்கள், ரிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக மின் உபகரணங்கள் |
| A - 04 | யன்னல் திரைச்சீலைகள் & சீருடை மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறை பொருத்திகள்,மாபிள்கல் வகைகள், நீர்வழங்கலுக்கான பொருட்கள் மற்றும் அதனோடிணைந்த பொருட்கள |
| A - 06 | கட்டட இரும்பு பொருட்கள், பெயின்ட் வாணிஸ் மற்றும் காட்வெயார் பொருட்கள் |
| A - 07 | மின்சாரப் பொருட்கள் அதன் உதிரிப்பாகங்கள் , மின்னிணைப்புக்கான பொருட்கள், மின் மோட்டார்கள்,மின்சார பல்ப்புக்கள், மின்விசிறிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனையவை |
| A – 09 | அழுக்கு நீக்கும் பவுடர்கள், விம், காபிக், மற்றும் கிருமிநாசினிகள் ஏனையவை |
| A - 10 | வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருட்கள டயர் ரியூப் மற்றும் ஏனையவை |
| A – 11 | தோல் உற்பத்திப் பொருட்கள், கம் சப்பாத்துக்கள் |
| A – 12 | எரிபொருட்கள், உராய்வு நீக்கிகள் |
| A – 13 | நூலகங்களுக்கான நூல்கள். |
| A – 14 | இரும்புப் பொருட்கள். |
| A – 15 | கற்கள், மண்வகைகள். |
| A – 16 | தீராந்திகள், பலகைகள், சட்டங்கள். |
| A – 17 | பனைமரங்கள், சலாகைகள். |
| A – 18 | அலங்காரப் பொருட்கள். |
| A – 19 | இலத்திரனியல் சாதனங்கள், துணைப்பொருட்கள். |
| A - 20 | தார். |
| தொ. இல | சேவைகள் வேலைகள் விபரம் |
| B-01 | ஒலியமைப்பு சாதனங்களும் அதனோடு தொடர்புடைய உபகரணங்களும் தொழினுட்ப ஆலோசனை வழங்கலும் |
| B-02 | உருக்கு,மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B-03 | மின் உபகரணங்கள் திருத்தம் & சேவிஸ் செய்தல் (காற்று குளிராக்கி, தொலைநகல் நிழற்பட பிரதி இயந்திரம், கணினி, விரல் அடையாளத்தை பதிவுசெய்யும் இயந்திரம்) |
| B-04 | மின் மோட்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரம், மின் விசிறிகள் ஜெனரேட்டர் திருத்துதலும் மீள முறுக்குதலும் |
| B-05 | பதிப்பக வேலை – சகலவித படிவங்கள & ஏனையவை |
| B-06 | உள்ளக தொலைபேசி இணைப்பும் பராமரிப்பும் |
| B-07 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம் |
| B-08 | கோலவுடை தைத்தல் |
| B-09 | இறப்பர் முத்திரை வகைகளை தயாரித்து வழங்கல் |
| B-10 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B-11 | அச்சிடுதல் |
| B-12 | வளிச்சீராக்கி திருத்தம் சேவீஸ் செய்தல் |
| தொ. இல | வாகன திருத்தமும் சுத்திகரிப்பு செய்தலும் |
| C-01 | சகல விதமான வாகன திருத்தமும் & மின்சார வேலை & வாகன உட்பக்கம் சீற் என்பவற்றிற்கான குசன் வேலை |
| C-02 | சகல விதமான வாகன சுத்திகரிப்பு |
| C-03 | வாகனங்களுக்குரிய ரியூப் ஒட்டுதல் உலோக வேலைகள் |

குடிசார் வேலைகள் (Civil works) - ICTAD / CIDA பதிவு உள்ளவர்கள் மட்டும்
* கட்டட நிர்மாணமும் திருத்தமும்
* வீதி நிர்மாணமும் திருத்தமும்
* கிணறு. குழாய் கிணறு அமைத்தல்

| தொ. இல | ஒப்பந்தத்தொகை பதிவுக்கட்டணம் | பதிவுக்கட்டணம் |
|---|---|---|
| D - 01 | ரூபா 2,000,000 சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத்தொகை | ரூபா 2,000 (VAT, NBT நீங்கலாக) |
| D - 02 | ரூபா 2 ,000,000ற்கு அதிகமானதும், ரூபா 5,000,000 ற்கு சமமான அல்லது அதற்கு குறைவான ஒப்பந்தத்தொகை | ரூபா 3,000 (VAT, NBT நீங்கலாக) |

**நிபந்தனைகள்:**

1. வழங்கல்கள். சேவைகள். குடிசார் வேலைகள் 2024ஆம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2. பதிவிற்காக பெறப்பட்ட விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் நிராகரிக்கும் உரிமை தவிசாளருக்கு / செயலாளருக்கு உண்டு.
3. ஒன்றுக்கு மேற்பட்ட தொகுதிகளிற்கு விண்ணப்பிப்போர் ஒவ்வொரு தொகுதிக்கும் தனித்தனியான படிவங்களில் கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கவேண்டும்.
4. பதிவுசெய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் இதற்குப் புறம்பான வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்களை கோருதல் மற்றும் கொள்வனவு செய்யும் உரிமை பிரதேசசபைக்குண்டு.
5. வியாபார பதிவுசான்றிதழில் குறிப்பிட்ட பொருட்கள் சேவைகளுக்கே வழங்குநர்கள் பதிவு செய்யப்படுவர்.
6. விலைமனு கோரும்போது முன்வராத. கட்டளைகளுக்காக குறித்த நேரத்திற்கு பண்டங்கள் சேவைகளை வழங்காத. சமர்பிக்கப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் பண்டங்களை வழங்காத வழங்குநர்களின் பெயர்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி பெயர் பட்டியலிலிருந்து நீக்கும் உரிமை பிரதேசசபைக்குண்டு.
7. விண்ணப்ப படிவங்களை நேரில் சமர்பிக்கலாம் அல்லது "வழங்குநராக பதிவு செய்வதற்கான விண்ணப்பம்-2024" என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு "செயலாளர். பிரதேசசபை. கரைதுறைப்பற்று எனும் முகவரிக்கு தபால்மூலம் அனுப்பிவைக்க முடியும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**க.சண்முகதாசன்**
**செயலாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேச சபை,**

(cr 41024) (N.1) **16.11.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு

# நடைபவனியும் விழிப்புணர்வும்

யாழ்ப்பாணம், நவ.17
சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு மாபெரும் நடைபவனி கடந்த செவ்வாய்க்கிழமை வட்டுக்கோட்டையில் முன்னெடுக்கப்பட்டது.
இந்த நிகழ்வு வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனை பொறுப்பு மருத்துவ அதிகாரி, மருத்துவக் கலாநிதி செந்தூரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நடைபவனியில் சங்கானை பிரதேச செயலகத்தின் நீரிழிவு விழிப்புணர்வு நிகழ்வும், இலவச நீரிழிவுப் பரிசோதனையும் மருத்துவ முகாமும் முன்னெடுக்கப்பட்டன.
யாழ்ப்பாண மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் நீரிழிவு நோயை எவ்வாறு கட்டுப்படுத்துவது தொடர்பாகக் கலந்துரையாடினார்.
தொடர்ந்து யோகாசனம் மூலம் நீரிழிவை கட்டுப்படுத்தும் நோக்கில், அராலி மத்தி ஆயுள் வேத வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் பணியாளர்களால் யோகாசன விழிப்புணர்வுச் செயற்றிட்டம் செய்து காண்பிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாணபதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி, சங்கானை உதவிப் பிரதேச செயலர், அராலி மத்தி ஆயுள்வேத வைத்தியசாலை வைத்தியர்கள், வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனை பணியாளர்கள், நலன்புரிச் சங்கத்தினர், அராலி மத்தி ஆயுள்வேத வைத்தியசாலை பணியாளர்கள், லயன்ஸ் கழகத்தினர், சங்கானை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அராலித்துறை படை முகாமின் இராணுவத்தினர், தெல்லிப்பழை மருத்துவமனை தாதியர் மேற்பார்வை உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-125)

## நீரிழிவுதின செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ. 17
யாழ்.நீரிழிவுக் கழகமும் யாழ். நீரிழிவுச் சிகிச்சை நிலையமும் இணைந்து நடத்திய உலக நீரிழிவுதின விழிப்பூட்டல் செயலமர்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது.
நீரிழிவு பற்றிய அறிமுக உரையை யாழ்.நீரிழிவுக் கழகத் தலைவர் தி.மைக்கல் நிகழ்த்தி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். (ச)

## பேசாலையில் நீரிழிவு தினம்

மன்னார் பேசாலை பிரதேச மருத்துவமனையில் உலக நீரிழிவுதினத்தை முன்னிட்டு மக்களுக்கு விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.
இந்த நிகழ்வு பேசாலை பிரதேச மருத்துவமனை பொறுப்பதிகாரி மருத்துவ கலாநிதி இ.ஈற்றன் பீரீஸ் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் நோய்களில் இருந்து எவ்வாறு எம்மை பாதுகாக்கமுடியும் என்பது தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது. (ரி-60)



# பசுமை இயக்கத்தால் கறுவா மரக்கன்றுகள்

யாழ்ப்பாணம், நவ.17
வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் மாணவர்களுக்கு இலவசமாக கறுவா மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.
முதற்கட்டமாக பலாலி வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களுக்கு அண்மையில் கறுவா மரக்கன்றுகள் கையளிக்கப்பட்டன.
பாடசாலை அதிபர் ச.விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் பங்கேற்று மாணவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினார்.
பெருமளவு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் வர்த்தகப் பயிராக விளங்கும் கறுவாச்செய்கை அண்மைக்காலமாக வடக்கிலும் முக்கியத்துவம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-27)



# சுகாதார அலுவலர்களுக்கு முல்லையில் கணினிப்பயிற்சி

முல்லைத்தீவு, நவ.17
முல்லைத்தீவு மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்துக்குட்பட்ட 20 உத்தியோகத்தர்களுக்கான கணினித் திறன் விருத்தி பயற்சிநெறி கடந்த இருநாள்கள் மல்லாவி தொழில்நுட்ப கலை, கலாசார மற்றும் பெண்கள் மேம்பாட்டு அமையத்தில் நடத்தப்பட்டது.
இதில் வளவாளர்களாக முல்லைத்தீவு தொழில்நுட்ப கலை, கலாசார மற்றும் பெண்கள் மேம்பாட்டு அமையச் செயலாளர் ஆசிரியர் லயன் சு.சுபநேசன், பாலிநகர் மகா வித்தியாலய ஆசிரியர் பிரசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர். பயிற்சியின் நிறைவில் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ச-19)

## வியாபார ஊக்கப்படுத்தல் வேலைத்திட்ட நிகழ்வு



யாழ்ப்பாணம், நவ.17
சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வியாபார ஊக்கப்படுத்தல் வேலைத்திட்ட நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.
சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் எதிர்காலத்தில் புதிய சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்குதலை நோக்கமாகக் கொண்டு இந்த நிகழ்வு சண்டிலிப்பாய் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினரால் நடத்தப்பட்டது. (ரி-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபான உரிமம் இரத்து: 198 மில். ரூபா வருமானம்



கொழும்பு, நவ. 15

மதுவரி நிலுவைத் தொகை யைச் செலுத்தத் தவறிய மதுபான உற்பத்தி நிறுவனங்களின் உரிமம் இரத் துச் செய்யப்பட்டதன் காரணமாக அரசாங்கம் இந்த மாதம் 198 மில்லியன் ரூபா மது வரி நிலுவையைப் பெற்றுள்ளது என்று நாடாளுமன்ற வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக ரணவக்க தெரிவித்துள்ளார்.

மதுவரி நிலுவையைச் செலுத்தத் தவறியவர்களின் உரிமம் இரத்துச் செய்யப்படவேண்டும் எனும் பரிந்துரையின் காரணமாக பல நிறுவனங்கள் நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு ஒப்பந்தம் செய்துள்ளன. 2023ஆம் ஆண்டுக்கான மதுவரி நிலுவைத் தொகை யைச் செலுத்தத் தொடங்கியுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டுக்கான நிலுவைத் தொகையாக 1.1 பில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தொகையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக ஒன்பது தவணைகளில் கட்டணங்களைச் செலுத்துவதற்கு நான்கு நிறுவனங்கள் ஒப்புக் கொண்டுள்ளன.

இந்த நான்கு நிறுவனங்களும் கடந்த 6ஆம் திகதி 198 மில்லியன் ரூபாவை செலுத்தியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்குள் மீதமுள்ள 156 பில்லியன் ரூபா வரியைச் செலுத்துவதற்கு அந்த நிறுவனங்கள் ஒப்புக்கொண்டுள்ளன என்று நாடாளுமன்ற வழிவகைகள் தொடர்பான குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார். (எ-இ)

# யாழில் சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், நவ. 17

யாழ்.மாவட்ட நீரிழிவுக் கழகம் மற்றும் யாழ். போதனா மருத்துவமனை ஆகியவற்றின் ஏற்பாட்டில் உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு விழிப்பு ணர்வூட்டும் நடமாடும் இலவச பரிசோதனை சேவை கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வு யாழ். போதனா மருத்துவமனை வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் யாழ். போதனா மருத்துவமனை நீரிழிவு சிகிச்சைப் பிரிவு நிபுணர் கலாநிதி ஆர்.ரி. அரவிந்தன் தலைமையில் நடைபெற்றது. யாழ். போதனா மருத்துவமனை பிரதிப்பணிப்பாளர் யமுனானந்தா நடமாடும் இலவச பரிசோதனை சேவையை ஆரம்பித்து வைத்தார்.

நிகழ்வில் யாழ்.போதனா மருத்துவமனை பதவி நிலை மருத்துவர்கள், நீரிழிவு சிகிச்சைப் பிரிவு மருத்துவர்கள், மருத்துவபீட மாணவர்கள், யாழ் மாவட்ட நீரிழிவுக் கழக தலைவர் மைக்கல் றொபேட் மற்றும் உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ரி-20)



# யாழ். பொதுநூலகத்தில் புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 17

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ்ப்பாணப் பொதுநூலகமும் உள்ளூர்ப் புத்தகசாலைகளும் இணைந்து நடத்தும் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

இந்தக் காட்சிக்கூடம் இன்று வெள்ளிக்கிழமையும் காலை 9 மணிமுதல் மாலை 4.30 மணிவரை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)

# INVITATION FOR BIDS
## University of Jaffna

## Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the University of Jaffna – 2024

1. The Chairman, Procurement Committee, University of Jaffna will receive sealed Bids for the following contracts up to 10.00 am on 8th December, 2023 from the eligible Firms

| Contract No (1) | Service (2) | Yearly Estimated Cost ( Rs. in Mn) excluding VAT (3) | Past Experience | | | Bid Security Rs. (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | One similar contract Rs. in Mn (4) | Annual average volume Rs. in Mn (5) | Trained staff available (6) | |
| UJA/CWP/CS/ 2024/01 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for University of Jaffna – 2024 (Jaffna) | 64.1 | 10.0 | 25.0 | 75 | 410,000.00 |
| UJA/CWP/CS/ 2024/02 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for University of Jaffna – 2024 (Kilinochchi) | 22.8 | 5.0 | 11.5 | 25 | 250,000.00 |

2. Period of contract should be 365 days subject to a performance evaluation period of 60 days.

3. Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.

   3.1 Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.

   3.2 Must have satisfactorily carried out at least one cleaning service contract to a Government Department/ Corporation/ University during the last 3 years where the annual contract sum is not less than the value indicated in column 4 above against each contract.

   3.3 Average of annual volume of cleaning service contracts performed in the last 3 years should be at least the value indicated in column 5 above against each contract.

   3.4 Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years should be at least the value indicated in column 6 above against each contract.

4. Interested bidders may obtain further information from Deputy Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, and inspect the bidding documents at the same address on any working day during working hours.
   Contact numbers are: Phone. Tel: **021 221 9201** **Fax: 021 221 9201**

5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to Deputy Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, **until 7th December, 2023** from 9:00 hrs to 15:00 hrs upon payment of a **non-refundable fee of Rupees three thousand five hundred (Rs.3,500/-) for each bid** to be deposited to the People's Bank, University of Jaffna with the **Reference No "970000060000276"** should be filled in the **Account Number column** in the Deposit Slip. **All bids shall be accompanied by a bid security for the amount as indicated in column 6 for each contract** in Bank Guarantee valid for 120 days (should be as 04.04.2024) from scheduled bid opening date obtained from a recognized commercial bank operating in Sri Lanka in favour of the Vice Chancellor, University of Jaffna should be accompanied with each bid.

6. Bidders are strongly advised to attend the **pre-bid meeting on 29th November, 2023 at 10.00 hrs** in the board room of the University of Jaffna for contracts No UJA/CWP/CS/2024/01 and **pre-bid meeting on 30th November, 2023 at 10.00 hrs** in the Maintenance Branch, Ariviyalnagar, Kilinochchi for contract No UJA/CWP/CS/2024/02 and visit each location before pricing.

7. Bids shall be delivered or sent by registered post to the Deputy Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57 or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch, to reach before 10.00 hrs, 8th **of December 2023**. Bids will be opened soon after closing the bids in the presence of the bidders' representatives who choose to attend.

8. Bids shall be Valid for a period of 91 Days from the date fixed for closing of Bids or any extended period

**Chairman,**
**Procurement Committee,**
**University of Jaffna, Thirunelvely,**
**Jaffna.**
**16.11.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரச் சீர்கேடு: உணவகங்கள் 'சீல்'

யாழ்ப்பாணம், நவ. 17

சுகாதாரச் சீர்கேடு காரணமாக, நான்கு உணவகங்கள் நேற்று' சீல்'வைத்து மூடப்பட்டன.



வண்ணார்பண்ணை பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் தி.கிருபன் தலைமையிலான குழுவினரால் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி மற்றும் இராமநாதன் வீதியில் உள்ள உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்கள் என்பன தீவிரமாகச் சோதனையிடப்பட்டன. இதன்போது மூன்று உணவகங்களும் ஒரு வெதுப்பகமும் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கியமை அவதானிக்கப்பட்டது. அவற்றுக்கு எதிராக நீதிமன்றத்தில் தனித்தனியாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய இந்த உணவகங்கள் சீல்வைத்து மூடப்பட்டன. வழக்கு டிசெம்பர் மாதத்துக்குத் தவணையிடப்பட்டது.

(அ-ம-26)


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.
## பொது அறிவித்தல்

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் சுழிபுரம் உபஅலுவலக எல்லைக் குட்பட்ட ஆதனங்களுக்கு 5% ஆக அறவிடப்பட்டு வுந்த ஆதன வரியானது 2024.01.01 ஆம் திகதி முதல் 6% ஆக அதிகரிக்கப்படுகின்றது. இவ் அறவீடானது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134, 144 இற்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

**செயலாளர்.**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**

(cr.41028) (N.1


# சிறிலங்கன் விமான சேவையால் பயணிகளுக்கு இலகு நடைமுறை

கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் சிறிலங்கன் விமானசேவை ஊடாகப் பயணம் செய்யும் பயணிகளுக்கு இலகுவான நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பயணிகள் தமது பொதிகளைத் தாமே அடையாளமிட்டு பயண அனுமதிச்சிட்டையைப் பெற்றுக்கொள்ளும் சுய சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

(ஓ-6)


## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
## 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் (வரைவு)
## பொது மக்கள் பார்வைக்கு

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்ட வரைவு பொது மக்கள் பார்வைக்காக 2023.11.17 இலிருந்து 2023.11.30 ஆம் திகதி வரை வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை மற்றும் சபையினது நூலகங்களான ஓமந்தை பொது நூலகம், கூமாங்குளம் பொது நூலகம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் வருமானங்கள், செலவினங்கள் சம்பந்தமான விடயங்களும் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களும் உள்ளடக்கப் பட்டுள்ளதால் பொதுமக்கள் பார்வையிட்டு அபிப்பிராயங்கள் இருப்பின் செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நெளுக்குளம் என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமோ 2023.11.30 ஆம் திகதிக்கு முன்னர் தெரிவிக்க முடியும் என்பதை அறியத்தருகிறேன்.

**வரைவு வரவு செலவுத்திட்ட சுருக்க அறிக்கை**

| | | |
|---|---|---|
| **வருமானம்** | | |
| சபையின் சொந்த வருமானம் | 43,957,880.85 | |
| நன்கொடைகள் மற்றும் மீள்நிரம்பல்கள் | 52,329,920.00 | |
| மூலதனப் பெறுகைகள் | 1,000.00 | |
| எதிர்பார்க்கப்படும் மொத்த வருமானம் | | **96,288,900.85** |
| **செலவினம்** | | |
| மீண்டெழும் செலவினம் | 91,134,420.00 | |
| மூலதன செலவினம் | 5,150,400.00 | |
| எதிர்பார்க்கப்படும் மொத்த செலவினம் | | **96,284,820.00** |

**செயலாளர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.**

(cr. 41016) (N.1)



## துணுக்காய் பிரதேச சபையின் 2024ம் ஆண்டுக்கான பாதீடு மக்கள் பார்வைக்கு

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168ஆம் பிரிவிற்கமைய துணுக்காய் பிரதேச சபையின் 2024ஆம் ஆண்டிற்கான பாதீட்டு வரைபு தயாரிக்கப்பட்டு 2023.11.17ஆம் திகதியிலிருந்து 2023.12.01 ஆம் திகதிவரை அலுவலக நேரத்தில் பிரதேச சபையிலும் சபையின் நூல்நிலையங்கள் மற்றும் சனசமூக நிலையங்களிலும் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும் என்பதை அறியத்தருகின்றேன்.

**அ.பாலகிருபன்**
**செயலாளர்**
**பிரதேச சபை, துணுக்காய்.**

(cr.41032) (N.1



"ஓம் விராட் விஸ்வ பிரமனே நமஹ"

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12 . 06 . 1948 | 16 . 11 . 2023 |



### கணேசு ஞானாம்பிகை (ஞானம்)

தாவடி வடக்கைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசு ஞானாம்பிகை அவர்கள் நேற்று (16.11.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா நாகம்மாவின் மருமகளும், காலஞ்சென்ற கணேசுவின் அன்பு மனைவியும், கமலாம்பிகை காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் பாக்கியலட்சுமி, காலஞ்சென்ற யோகராசா (அப்பு) மற்றும் பத்மசோதி, ஜெயசோதி, பவானி, தேவராசா (நகுலன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பவளரத்தினத்தின் அன்பு மைத்துனியும், சிறிதரன், ஜெயதரன், கோணேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சரணியா, ஜெயகுமாரி, சோபனா ஆகியோரின் மாமியாரும், கனிசன், ஐதுர்சிகா, ஷயானி, அஸ்வினி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குறுக்கு றோட்,**
**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 26982) S-1



## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 . 10 . 1952 | 16 . 11 . 2023 |



### பரமயோகி சுப்பிரமணியம்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பரமயோகி சுப்பிரமணியம் நேற்று (16.11.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமயோகி - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு புதல்வரும், காலஞ்சென்ற சுந்தரம் - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், பிருந்தா, பாலேஸ், கமலேஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெகதீசனின் அன்பு மாமனாரும், கனேகேஸ்வரி, கனகரட்ணம், பரமேஸ்வரி, இராஜேஸ்வரி மற்றும் காலஞ்சென்ற ராஜரட்ணம், வேல்முருகன், சக்திவேல் ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயமலர், மல்லிகாதேவி, இராசமணி, நிலாந்தி, இரத்தினேஸ்வரி, தர்மராசா மற்றும் காலஞ்சென்ற அப்புத்துரை, கந்தையா, சண்முகலிங்கம், தங்கவேல் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2023) வெள்ளிக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கொல்லங்கலட்டி.**
**தொடர்புகளுக்கு: 077 500 3850**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

(CS 26983) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமற்ற எரிபொருள் சந்தையில் விநியோகம்

## விளக்கம்கோருகிறார் சஜித்



**கொழும்பு, நவ.17**

**ஆய்வக சோதனைகளின் மூலம் தரமற்றது என நிரூபிக்கப்பட்ட எரிபொருள் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.**

இதுதொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்துள்ளதாவது:

கப்பல்ஊடாகநாட்டுக்குக்கொண்டு வரப்பட்ட எரிபொருளுக்கு என்ன நடந்தது? எரிபொருள் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வறிக்கைகள் முன்வைக்கப்பட வேண்டும். அத்துடன், இந்த விடயம் தொடர்பில் அமைச்சு எவ்வாறான தீர்மானங்களை முன்னெடுத்தது? உண்மையிலே இந்த எரிபொருள் திருகோணமலைமுனையத்துக்கு அனுப்பப்பட்டதா? அல்லது கொலன்னாவைக்கு அனுப்பப்பட்டுள்ளதா? என்பது தொடர்பில் தெளிவான விளக்கம் வழங்கப்பட வேண்டும். இந்த விடயத்தில் பெரும் மோசடி இடம்பெற்றுள்ளது என்பது மிகத் தெளிவாகக் காண முடிகின்றது. தரமற்ற எரிபொருள் கொள்வனவு மற்றும் விநியோகம் தொடர்பில் தெளிவான விளக்கம் அவசியம் - என்றார்.

அதேவேளை, இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட 19 ஆயிரம் மெற்றிக் தொன் டீசலில் 11 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் தரமற்றது என ஆய்வகச் சோதனைகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த டீசல் சிலோன் இந்தியன் ஒயில் கம்பனியால் முன்பதிவு செய்யப்பட்டுள்ளது என்று பெற்றோலிய சேமிப்பு முனையத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (எ-இ)



# விளையாட்டு அமைச்சருக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, நவ.17

விளையாட்டுத்துறைஅமைச்சரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. அமைச்சர் தனது உயிருக்கு ஆபத்து எனத் தெரிவித்துள்ள நிலையிலேயே அவருக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த 7 பேரை தனது பாதுகாப்புக்குப் பயன்படுத்துவதற்கு அமைச்சருக்கு உரிமையுள்ளது. அமைச்சரின் உயிருக்கு அச்சுறுத்தல் என்ற தகவல்களால் அமைச்சரின் பாதுகாப்புக்காக மேலும் மூவர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு இதற்கான அனுமதியை வழங்கியுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)

# டெங்குக் களப்பணிகளிலிருந்து பரிசோதகர்கள் பகிஷ்கரிப்பு!



கொழும்பு, நவ.17

பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் டெங்குக் கட்டுப்பாடு நடவடிக்கைகளிலிருந்து விலகி பகிஷ்கரிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனர் என்று அந்தச் சங்கம் அறிவித்துள்ளது.

தமது குறைகளுக்குத் தீர்வு கிடைக்காதமையையிட்டு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப் படுகிறது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கச் செயற்குழு உறுப்பினர் ரொஷான் குமார தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

களப்பணிகளுக்காக எமக்கு வழங்கப்படும் போக்குவரத்துக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவில்லை. வழங்கப்படும் கொடுப்பனவுகள் வாழ்க்கைச் செலவு, எரிபொருள் பராமரிப்புச் செலவுகள் ஆகியவற்றுக்கு போதாது. இது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு நிதிச் சிக்கல் களுக்கு வழிவகுக்கிறது.

அந்தவகையில் எமக்குத் தீர்வு வழங்கப்படவேண்டுமென வலியுறுத்தி அனைத்து டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளிலுமிருந்து விலகத் தீர்மானித்துள்ளோம் - என்றார். (ச-இ)

# ஜனவரி மாதம் இலங்கைக்கு வரவுள்ள சீன ஆய்வுக் கப்பல்

கொழும்பு, நவ.17

இலங்கையின் விசேட பொருளாதார வலயத்தில் தனது அதிநவீன ஆராய்ச்சிக் கப்பல் ஆய்வுகளில் ஈடுபடுவதற்கான அனுமதியை சீனா கோரியுள்ளது. 'சியாங் யாங் கொங் - 3' என்ற கப்பல் இலங்கைக்கு வருவதற்கே சீனா அனுமதி கோரியுள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி 5ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரை இந்தக் கப்பல் இலங்கையில் ஆராய்ச்சிகளில் ஈடுபடும். இந்தக் கப்பல் சீனாவின் இயற்கை வள அமைச்சுக்குச் சொந்தமானது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தியாவின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் கடந்த ஒக்ரோபர் மாதம் சீனக் கப்பல் இலங்கை வந்திருந்தது. (எ-இ)

பாடசாலைகளில்

# ஆசிரியர்கள் குத்தாட்டம் அனுமதிக்கப்பட்ட ஒன்றா?:

## வடக்குக் கல்வியமைச்சுக்கு சி.தவராசாவால் கடிதம்

அண்மையில் ஓர் இந்து ஆரம்பப் பாடசாலையில் சிறுவர்கள் முன்னால் ஆசிரியர்கள், ஆசிரியைகள் சினிமாப் பாட்டுக்கு நடனமாடிய காட்சியானது பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்தவன் என்ற வகையில் என்னை வெட்கித் தலைகுனிய வைக்கின்றது எனவும், எமது சிறார்களின் எதிர்காலத்தை வளர்க்கவேண்டியவர்கள் இவ்வாறு குத்தாட்டம் போடுவது பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்ட ஒன்றா? என்பதைத் தங்களிடமிருந்து அறிய விரும்புகின்றேன் எனவும் வடக்கு மாகாணசபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் என்.பற்றிக் டிறஞ்சனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கேள்வியெழுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அண்மையில் இந்து ஆரம்பப் பாடசாலை ஒன்றில் நடைபெற்ற 2023ஆம் ஆண்டு ஆசிரியர் தின நிகழ்வுகள் தொடர்பான காணொளிக் காட்சி பல ஊடகங்களிலும் வெளியாகியிருக்கின்றது. ஆசிரியர் தின விழா என்பது ஆசிரியர்கள் மாணவர்களுக்கும், சமுதாயத்துக்கும் ஆற்றும் சேவையினை நினைவுகூர்ந்து அவர்களைக் கௌரவிக்கும் ஒரு தினமாகும். ஆனால், அந்த இந்து ஆரம்பப் பாடசாலையில் சிறுவர்கள் முன்னால் ஆசிரியர்கள், ஆசிரியைகள் சினிமாப் பாட்டுக்கு நடனமாடிய காட்சியானது பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்தவன் என்ற வகையில் என்னை வெட்கித் தலைகுனிய வைக்கின்றது.

இதனை ஆசிரியர்கள், ஆசிரியைகள் தங்களுடைய சொந்த விடயமாகக் கருதுவதாகவிருந்தால் அவர்கள் யாருடனும் பாடசாலைக்கு வெளியில் குத்தாட்டம் போடலாம். பாடசாலைக்குள் இவ்வாறான நிகழ்வுகளை நடக்கவிட்டு நாம் கட்டிக்காத்த பாடசாலையினைக் கீழ்நிலைக்கு இட்டுச் செல்லாது பாதுகாக்க நடவடிக்கை எடுக்கும் வண்ணம் தங்களை வேண்டிக் கொள்கின்றேன் - என்றுள்ளது. (ம-66)


### வாடகைக்கு

A9 கண்டி வீதி, சாவகச்சேரி மொடன் கொஸ்பிற்றலுக்கு முன்பாக சாகவச்சேரி பக்கம் 3 வது வீடு சிவன்கோயில் சந்தியில் மிகப்பெரிய அளவிலான வீடு வாகன தரிப்பிட வசதியும் உண்டு. நல்ல தண்ணீர்

021 221 3590, 074 252 6691

### வேலையாட்கள் தேவை

பிரபல ஐஸ்கிறீம் தயாரிப்பு நிலையம் ஒன்றிற்கு sales rep தேவை.
முன் அனுபவம் உள்ளவர்கள் தெடர்பு கொள்ளவும்.
வவுனியா மாவட்டம்

0768490987

### மரண அறிவித்தல்

அன்னை மடியில் 31 . 08 . 1922



ஆண்டவன் அடியில் 15 . 11 . 2023

**மனுவேற்பிள்ளை அந்தோனிப்பிள்ளை**

(முன்னாள் இயந்திர இயக்குநர், ஒப்புநோக்குனர் - ஆனந்தா அச்சகம்)

அவர்களின் பூதவுடல் இன்று (17.11.2023) வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு பி.ப. 3.00 மணியளவில் யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இல.270/1, அடப்பன் வீதி, மடம் தெற்கு, யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர். 077 959 7158 (றூபன் - மகன்)

CS 26860 A-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.